VAALIPAN MINISTRIES
SRI LANKA

# வாலிபன்
# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

இதழ் - 100 | வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை | வைகாசி - 2016



## அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்?...

~ சகரியா 4:10

100 வது இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு,

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

வாலிபன் ஊழியத்தில் நூறாவது இதழினூடாக சந்திப்பதில் மகிழ்ச்சி. கடந்த நூறு வெளியீடுகளிலும் தாங்கள் நல்கிய உதவிகளுக்காகவும் ஆதரவுக்காகவும் நன்றிகள்! குறிப்பாக இவ்வூழியம் ஊடாக இலங்கையில் மட்டுமல்ல, தேசங்கள் கடந்து பலரது வாழ்விலும் குடும்பங்களிலும் கிறிஸ்துவின் அன்பை விதைக்கவும், கிறிஸ்துவின் அன்பு பெருகவும் காரணமாயிருந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவையெல்லாவற்றிற்கும் மேலாக இவ்வூழியத்தின் ஒவ்வொரு கணப்பொழுதிலும் எம்மை வழிநடத்திய எம் ஆண்டவர் இயேசுவை நன்றியறிந்த உள்ளத்தோடு ஆராதிக்கின்றோம்.

இந்நாட்களில் வாசிப்புப்பழக்கம் குறைவடைவது வருத்தத்திற்குரியதே! அதற்குப் பல காரணங்களும் உள்ளது உண்மையே! நேரமின்மை, அவசர அவசரமாக வேலைக்கு செல்ல வேண்டியது, குடும்பத்தையும், வேலையையும், படிப்பையும், நண்பர்களையும் கவனிக்க வேண்டிய நிலமை... இவ்வாறு பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. ஆனாலும் சரித்திரத்தை நோக்குமிடத்து சரித்திர நிகழ்வுகள், கண்டுபிடிப்புக்கள் மனித வாழ்வின் முன்னேற்றங்கள் இவை எல்லாமே புதிய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லிய பெரிய பொறுப்பு எழுத்துருவுக்கும், அதனை வாசிப்பவர்களுக்கும் இருந்தமை கண்கூடு, எனவே, இவ்வாலிபன் பத்திரிகை ஊழியமும் கிறிஸ்தவ சபை வாழ்விலும் தனிப்பட்ட விசுவாசிகளின் வா்ழ்விலும் ஒரு "சரித்திர சுவடாகவும்" ஊடகம் என்ற அடிப்படையில் உயர்வுக்கும் தாழ்வுக்கும் பாலமாகவும், கிறிஸ்துவின் நாம மகிமைக்காகவும் அவரது இராஜ்ஜியத்தில் வருகைக்கு ஆயத்தம் செய்யும் ஊடகமாகவும் அமையும் என வாஞ்சையுடனும் ஜெபத்துடனும் உங்களிடம் நூறாவது மடலினை சமர்ப்பிக்கின்றேன்.

கிறிஸ்துவின் பணியில்
ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேதமும் விஞ்ஞானமும்

சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்

## இயன்றளவு தேடும் ஒரு எளியனின் முயற்சி .... 08

தற்காலத்தில் வேதபண்டிதர்களில் பலர் (Modern Theological Critics) பரிசுத்த வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களான ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகியவை மோசேயினால் எழுதப்பட்டவையல்ல. (J.E.D.P) என்று சுருக்கமாகக் கூறும் வார்த்தைகள் அடங்கிய நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள் இணைத்து கீழ்க் கண்ட காலங்களில் இப்புத்தகங்களை எழுதியிருக்கலாம் அல்லது தொகுத்திருக்கலாம் என்று தமது அறிவின் ஆய்வு மேன்மைகளை வெளிப்படுத்த முயற்சித்துள்ளார்கள் எனக் கருதமுற்படலாம்.

விசேடமாக ஆதியாகமம், யாத்திராகமம், எண்ணாகமம் ஆகிய புத்தகங்களில் இறைவனுக்கு சில இடங்களில் 'யெகோவா" (Jehova) என்ற சொல்லும், சில இடங்களில் 'ஏலோயீம்" என்ற சொல்லும் பாவிக்கப்பட்டிருக்கிறது. வேதாகமத்தைக் குறைகூறும் தற்காலத்தின் பண்டிதர்களின் அர்த்தப்படி 'யெகோவா" என்ற சொல் முற்காலத்தின்பிரயோகம் பண்ணப்பட்டதென்றும், அதன்பின் சிலகாலம் சென்றபின் 'ஏலோயீம்" என்ற சொல் உபயோகத்திற்கு வந்ததென்றும், ஆகையால் இந்த ஐந்து ஆகமங்களிலும் 'யெகோவா' என்ற சொல்லை உபயோகித்தவர் ஒருவரோ அல்லது ஒரு குழுவாரோ, அதைப்போல் 'ஏலோயீம்' என்ற சொல்லை உபயோகித்து எழுதியவர் வேறு ஒருவரோ அல்லது குழுவாரோ என்று கருதி, இவர்களுக்கு சுருக்கமாகப் பெயரிட்டு, இந்த ஆகமங்களை கூறுபோட்டு இந்த ஆகமங்கள் மோசேயால் எழுதப்பட்டவையல்ல, இப்பகுதிகள் கி.மு.900 ஆண்டுகள் முதல் கி.மு 750ம் ஆண்டுகளுக்குள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டனர்.

அது மட்டுமல்ல. சில பகுதிகள் அக்கால ஆசாரியக் குழுக்களினாலும் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. ஆகமொத்தத்தில் "இவைகள் மோசேயால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்டவையல்ல" என்பதான கருத்தை முன்வைத்திடமுயன்றார்கள். ஆனால் "ஜேம்ஸ் ஆர்" எனப்பெயர்கொண்ட உலகப்புகழ் திருமறை ஆராய்வாளரால் எழுதப்பட்ட "பழைய ஏற்பாட்டிலுள்ள சிக்கல்களின் ஆராய்ச்சி" எனப் பெயர் கொண்ட அற்புதமான நூல் பல ஆணித் தரமான உண்மைகளை வெளியே கொண்டுவந்தது! அதாவது 'யெகோவா' என்ற சொல்லும் 'ஏலோயீம்' என்ற சொல்லும் ஏககாலத்தில் எபிரேயரால் கர்த்தருக்கு உபயோகிக்கப்பட்ட வார்த்தை களை அற்புத ஆதாரங்களுடன் நிரூபித்தது மட்டும் அல்ல, இதனை வைத்து கால கட்டங்களை நிர்ணயம் செய்வது சரியல்ல என்பதையும் ஞானத்தோடு நிரூபித்தார்.

மொத்தத்தில் பஞ்சாகமங்கள் எனக் கூறப்படும் பரிசுத்த வேதாகமத்தின் முதல் ஐந்து ஆகமங்களும் இலங்கை வாழ் மெதடிஸ்தர்களினால் மோசேயே இதன் ஆசிரியர் என ஏற்றுக்கொண்ட நிலையில், நமது பிரதான ஆசாரியரான 'கிறிஸ்துவும்" "மோசேயின் நியாயப் பிரமாணம்" எனச் சில நிமிடங்களில் கூறியிருப்பது நமக்கு விசுவாசம் ஊட்டும் இதமாகும். இந்த உலகத்திற்கு உரிய பண்டிதர்கள் உலக ஞானத்தின்படி, ஊர், பெயர் தெரியாத யாரோ எழுதி வைத்தார்கள் என்று கூறி அநேக நூல்களை வெளியிட்டும் நம்முடைய உறுதியான நம்பிக்கையினை குறைத்திட முற்படுகின்றனர். அப்படிப்பட்ட மக்களோடு இவை குறித்து விவாதித்தல் "இப்படிப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டால் நமது விசுவாசம் உறுதிப்படுமல்லவா? எனக் கேள்விவேறு எழுப்புகின்றனர். உதாரணமாக "வாலிபன்" வாசகர்களுக்கு "ஸ்பூன்" அளவு மயக்க வினாவொன்றை முன் வைக்கிறேன்.


உபாகமத்தை யார் எழுதியவர் என்பதில் வேதாகமப் பண்டிதர் களுக்கெல்லாம் பெரிய சந்தேகம். உபாகமத்தை எழுதியது "உபாகமக்குழு" (Deutronomical Authors) என்று கூறுகின்றனர். அதே சமயத்தில் தமிழ் இறையியல் நூலோர் குழு உபாகமம் நூலைக் குறித்துக் கூறும்போது இதனை எழுதியவர்கள் ஆசாரியர் வட்டத்தை (P) சேர்ந்தோராக இருக்கவேண்டும் என்பது 31ம் அதிகாரம் 09ம் வசனத்திலிருந்து தெரிகிறது என்று எழுதி வைத்திருக்கிறார்கள். (திருமறை விளக்கவுரை, பக்கம் 90) உபாகமம் 31:09ஐப் பார்த்தால் அது கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது. "மோசே இந்த நியாயப் பிராமணத்தை எழுதி அதைக் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவிப் புத்திரரான ஆசாரியருக்கும், இஸ்ரவேலுடைய மூப்பர் எல்லோருக் கும் ஒப்புவித்து (வசனம் 10) அவர்களுக்கு கட்டளையிட்டது என்னவென்றால், விடுதலை யின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே கூடாரப் பண்டிகையில் (வசனம் 11) உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்தில் இஸ்ரவேலர் எல்லோரும் அவருடைய சந்ததியில் சேர்ந்து வந்திருக்கும்போது இந்த நியாயப் பிராமணத்தை இஸ்ரவேலர் எல்லோரும் கேட்க அவர்களுக்கு முன்பாக வாசிக்கக்கடவாய்.

- தேடல் தொடரும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்தெடுத்த முத்துக்கள்



K.ஜன்சி

பரிசுத்த வேதாகமத்தைத் தேடி வாசிப்போம்.

நாங்கள் வேதத்தைத் திறந்து வாசிக்குமுன் கடவுளிடம் எங்கள் இதயக்கதவை திறக்க வேண்டும் என மன்றாடிட வேண்டும். நாங்கள் அதில் பிரியமாய் இருந்து இரவும் பகலும் வாஞ்சையோடு காத்திருந்து வாசிப்போமாகில் கீழே கூறப்பட்ட ஜெபத்துக்கு நிச்சயமாக பதில் தருவார்.

அன்புள்ள பிதாவே, வேத வசனம் உள்ளத்தில் விசுவாசத்தை கொண்டு வருகிறது. என வேதம் கூறுகிறது. அதிசயங்களை காணும்படி இருதயத்தில் வாஞ்சையை கொடுத் தருளுங்கள். வேதத்திலுள்ள பொக்கிஷமாகிய வார்த்தை களை காணவும் சுதந்தரித்துக் கொள்ளவும் உணர்த்தியருளும். பலமுறை வேத வசனத்தை வாசிக்கும் போது அதன் கருத்துக்கள் எனக்கு விளங்காமல் போய்விடுகின்றன. வாசிப்பது மனதில் தங்காமல் மறந்து விடுகிறது. இதனால் நான் விசுவாசத்தை பெற முடியாமல் போய் விடுகிறது. உம்முடைய வசனங்களை மென்மேலும் அறிந்து கொள்வதன் மூலம் நான் தெய்வீக விசுவாசத்தை பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள முடியும். எங்கள் ஜெபத்தை கேட்டு பதில் கொடுப்பவரே

நன்றி.

மேலே கேட்கப்பட்ட ஜெபத்துக்கு நிச்சயமாக பதில் தருவார். எப்படி வேதாகமம் வந்தது? தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது. (2 தீமோத்தேயு 3:16) மனுஷனால் எழுதப்பட்டதல்ல - முன்குறிப்பு இல்லை - முன்னுரை இல்லை - அறிமுகவுரை இல்லை திருத்தப்பதிப்பு இல்லை (வெளி 22: 18 -19) அப்படியாயின் எழுதியவர் யார், (வெளி 21:5) உதாரணத்துக்கு ஒரு ஜனாதிபதி தனது செயலாளரிடம் ஒரு கடிதம் எழுதும் படி அழைக்கின்றார். அந்த ஜனாதிபதி சொல்லச் சொல்ல காரியதரிசி எழுதுகிறார். எழுதியது ஜனாதிபதிக்கே உரியது. இப்படியாகத் தான் ஆவியானவர் அநேகரின் உள்ளங்களில் ஏவி வேதாகமத்தை எழுதி வைத்தார். யார் யாரை பரிசுத்த ஆவியானவர் எழுத வைத்தார்.

1. முன்பு சொகுசாக வாழ்ந்தவனும் அதன் பின் மாமனாரின் ஆடுகளை மேய்த்தவனும் கடைசியாக இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தினவனுமாகிய மோசே.
2. ஆடுகளை மேய்த்த ஆமோஸ்.
3. பாணபாத்திரக்காரனாகிய நெகேமியா.
4. இராணுவ தளபதி யோசுவா
5. சாலோமோன் ராஜா.
6. முன்பு ஆடுகளை மேய்த்து பின்பு இஸ்ரவேலின் ராஜாவாக இருந்த தாவீது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. வரி வசூலித்த மத்தேயு.

8. வைத்தியனாகிய லூக்கா.

9. மீன்பிடித்துக் கொண்டிருந்த பேதுரு.

10. யூதரபியாகிய பவுல் போன்ற பலதரப்பட்ட மக்கள் வேதாகமத்தை எழுதப் பயன்படுத்தப்பட்டார்கள். இது இவர்களின் சொந்த வார்த்தையல்ல பரிசுத்த ஆவியானவரால் ஏவி எழுதப்பட்டவை தான்.

"இப்பொழுது நீ வேதத்தைச் சுமந்தால் பின்பு வேதாகமம் உன்னை சுமக்கும்."

பரிசுத்த வேதாகமம் ஒன்று கண்ணாடி அலுமாரியில் அனேக காலமாக தூசி பிடித்துப்போய் இருப்பதை மகள் அவதானித்தாள். ஏன் அம்மா அந்தக் கறுப்புப் புத்தகம் தூசி பிடிச்சிருக்கிறது. வாசிப்பதில் லையா என கேட்டாள். அம்மா அதற்கு அது கர்த்தருடைய புத்தகம் என்றாள். அப்படியாயின் அதை கர்த்தருக்கே திருப்பிக் கொடுத்து விடுங்களேன் என்றாள் மகள்.

ஆம் நாமும் அப்படியேதான் வேதாகமத்தை தூசி பிடிக்க வைக்கிறோமோ அல்லது வாசிக்க முயல்கின்றோமா சற்று சிந்திப்போம்.

என் தாயின் கருவிலே
தெரிந்து கொண்ட தங்க
தகப்பனே இயேசப்பா
உம்மை தாய் என்று
அணைத்திடவா இல்லை
தந்தை என்று அழைத்திடவா

இந்த பாவிமனம் துடிக்குதய்யா
உம்மை பார்க்கவென்று பதறுதய்யா
உம்மை தாய் என்று அணைத்திடவா
இல்லை தந்தை என்று அழைத்திடவா

பாசம் நிறைந்தவரே
பரலோக ராஜாவே

பாவம் எனும் கல்லறையில்
நான் பலகாலம் படுத்திருந்தேன்
என்னை பாசத்தோடு தூக்கினீரே
என் பாவங்களை மன்னித்தீரே
உம்மை தாய் என்று அணைத்திடவா
இல்லை தந்தை என்று அழைத்திடவா.

R.ARON



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பத்து மடங்கு ஞானம்

நமக்கு எல்லாருக்கும் ஆல்பர்ட் ஐன்ஸ்டின் அவர்களைப் பற்றி நன்றாக தெரியும். அவர் Modern day's Father of Physics என்றழைக்கப்படுகிறார். அவருடைய ஞானம் மிகசிறந்ததாக இருந்தது. சாதாரணமாக ஒருவர் I.Q. test செய்ய வேண்டுமென்றால், அவருடைய I.Q. வை வைத்தே கணக்கிடுவர். ஐன்ஸ்டினின் I.Q. 160க்கும் மேல் இருந்தது. சாதாரணமாக ஒரு மனிதனின் I.Q. level 90 லிருந்து 100 வரை இருக்கும். 100லிருந்து 110 வரை இருப்பவருக்கு சாதாரண நிலையிலிருந்து சற்று அதிகம் என்று கூறுவர்.

ஒரு நண்பர் எப்போதும் தனக்கு அதிக I.Q. இருப்பதாக கூறிகொள்வார். அவர் யூதமக்களுக்கு எதிரான ஒரு நாட்டை சேர்ந்தவர். ஒரு முறைநான் கூறினேன், 'நீர் எப்போதாவது I.Q.test செய்திருக்கிறீரா?' என்று கேட்டதற்கு 'எனக்கு அதெல்லாம் தேவையில்லை, எனது மூளை மிகவும் பெரியது' என்று கூறினார். அப்போது நான், சரி என்னதான் இந்த I.Q.test- ல் இருக்கிறது என்று பார்க்க ஆரம்பித்தபோது, ஐன்ஸ்டினின் I.Q. level 160-க்கு மேல் இருப்பதை கண்டேன். ஐன்ஸ்டின் ஒரு ஜெர்மானிய யூதர். இதை நான் அந்த நண்பரிடம் சாட்சிகளுடன் சொன்ன போது, அவர் வாயடைத்து போனார்.


'நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்' (உபாகமம் 7:6) என்று இஸ்ரவேலரை தமக்கு சொந்தமாக தேவன் தெரிந்துகொண்டபோது, அவர்களுக்கு விசேஷித்த கிருபைகளையும் கொடுத்திருந்தார். அதனால்தான், தானியேல் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவை குறித்து வாசிக்கும்போது, 'ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக்கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்' எனப்பார்க்கிறோம்.

சரி, யூதர்களுக்கு மட்டும் தானா அந்த ஞானமும் விவேகமும்? கர்த்தர் ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நமக்கும் நிச்சயமாக அதை கொடுப்பார். 'உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்' (யாக்கோபு 1:5) என்று வாக்குத்தத்தம் செய்தவர் நிச்சயமாகவே நம்மையும் அவ்வித விசேஷித்த ஞானத்தினால் நிரப்ப வல்லவராகவே இருக்கிறார். முற்பிதாக்களில் ஒருவராகிய

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விலையேறப்பெற்றவர்கள்

- சகோ.எனிட் - வாலியன் குடும்பம் -

ஒரு போதகர் ஒரு 500 ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து, தன் சபையில் உள்ளவர்களை பார்த்து, 'யாருக்கு இந்த பணம் வேண்டும்' என்று கேட்டார். 'இதை உங்களில் யாருக்காவது ஒருவருக்கு கொடுக்கபோகிறேன், ஆனால் அதற்கு முன் நான் ஒன்று செய்யபோகிறேன்' என்றார்.

சபை மக்களெல்லாரும் ஆவலோடு அவரை பார்த்து கொண்டிருக்க, அவர் அந்த நோட்டை எடுத்து, கசக்கிவிட்டு, 'இன்னும் யாருக்காவது இந்த நோட்டு வேண்டுமா' என்று கேட்டார். அப்போதும் மக்கள் கைகளை உயர்த்தினார்கள். அப்போது, அவர் அந்த நோட்டைதன் கால்களில் உள்ள செருப்பால் அதை மிதித்து, அழுக்காக்கி, அதைகசக்கி 'இன்னும் யாருக்காவது இந்த நோட்டு வேண்டுமா' என்று கேட்டார். அப்போதும் மக்கள் கைகளை உயர்த்தினார்கள்.

அப்போது அவர் தன் சபை மக்களை நோக்கி, 'என் அருமை கர்த்தருடைய ஜனமே, இன்று ஒரு நல்ல பாடத்தை கற்றுகொண்டீர்கள். இந்த 500 ரூபாய் நோட்டு எத்தனை அழுக்கானாலும் அது தன்னுடைய மதிப்பை இழக்கவில்லை. அது எத்தனை கசக்கப்பட்டாலும் அது 500 ரூபாய் மதிப்பானதே. அது அழுக்கானதினால், அதன் மதிப்பு ஒரு நாளும் குறைந்து போகபோவதில்லை.

நம் வாழ்விலும், நாம் எத்தனை அழுக்கானவர்களாயிருந்தாலும், நம்முடைய சூழ்நிலைகளினால் பாதிக்கப் பட்டிருந்தாலும், நாம் ஒருவருக்கும் பிரயோஜனமில்லாதவர்கள், நாம் மதிக்கப்படதகுதியற்றவர்கள் என்று நம்மை நாமே தாழ்த்திகொண்டாலும், கர்த்தருடைய பார்வையில் நாம் என்றும் கனம் பெற்றவர்களே! நாம் அழுக்கானவர்களாயிருந்தாலும் கர்த்தராகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் கழுவப்பட்டிருந்தால், நாமும் கர்த்தருடைய பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றவர்களே!' என்று கூறினார்.


ஆம்! 'வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும் அவைகள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்'. - (ஏசாயா1:18) அப்படி நம் பாவங்கள் சிவப்பானதாக, அல்லது இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாசற்ற, விலைமதிப்பற்ற இரத்தத்தால் கழுவப்படும் போது, அது உறைந்த பனியைப் போலவும், பஞ்சைப்

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்கவும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்த்தியாய் செய்கின்ற தேவனே



அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்.
(பிரசங்கி 3:11)

சந்நியாசி ஒருவர் தனக்கு எண்ணெய் வேண்டுமென்று ஒரு ஒலிவ் மரக்கன்றை நட்டார். அன்று இரவு ஜெபத்தில், "கர்த்தாவே இந்த ஒலிவ் மரக்கன்றின் மெல்லிய வேர்கள் தண்ணீர் குடித்து பெரிதாக, இதற்கு மழை தேவை சிறு தூரலை அனுப்பும் ஆண்டவரே. என் மரத்திற்கு சூரிய வெப்பம் வேண்டும்" என்றார். சூரியனும் பிரகாசித்தது. "இப்பொழுது இதன் பாகங்கள் உறுதிப்பட கடும் பனி வேண்டும்" என்றார். இதோ அந்த சின்ன மரத்தில் பனித்துளிகள் மின்னின. ஆனால் அந்த செடி சாயங்காலத்தில் வாடிப்போனது.

இந்த சந்நியாசி தன்னை போலொத்த மற்றொரு சந்நியாசியிடம் சென்று தன் கதையை சொன்னார். அந்த சந்நியாசி "நானும் ஒரு சின்ன மரம் நட்டேன். இதோ பாரும் அது செழித்து ஓங்குவரை நான் மரத்தை தேவனிடம் நம்பிக்கையாய் விட்டுவிட்டேன். அதை உண்டாக்கியவர் அதற்கு இன்னது தேவை என்பதை நன்றாக அறிவார். நான் ஒரு நிபந்தனையும் வைக்கவில்லை. தேவனே புயலோ, வெயிலோ, காற்றோ, மழையோ எது தேவையோ அதை அனுப்பும் சிருஷ்டித்த நீர் அதன் தேவைகளை அறிவீர் என்று ஜெபித்தேன் என்றார். இந்த அழகான உவமையை சார்லஸ் கவ்மேன் அம்மையார் தனது புத்தகமொன்றில் எழுதியிருந்தார்.

நம்முடைய பிதாவாகிய தேவன் சகலத்தை யும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய் செய்து முடிப்பவர். ஆனால் நாமோ தேவன் இப்படி இப்படித்தான் நம்முடைய வாழ்க்கையில் செயல்பட வேண்டும் அல்லது ஆசீர்வதிக்க வேண்டுமென்று எதிர்ப்பார்க்கிறோம் நாம் விரும்பும் காரியங்கள் நிறைவேறாமல். நாம் விரும்பாத காரியங்கள் நடக்கும் போது தேவன் என்னை மறந்துவிட்டார் என்று நினைக்கின்றோம்.


ஆபிரகாம் கூட இப்படி ஒரு சூழ்நிலையில் மனம் பதறி தேவனிடத்தில் விண்ணப்பம் செய்தார். சாராள் மூலம் தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் தாமதமானபோது. ஆகார் மூலம் ஒரு சந்ததியை உருவாக்கி 'இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பா னாக' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவனுக்கு ஒரு ஆலோசனை சொல்லி விண்ணப்பம் செய்கிறார். இதன் விளைவு அந்த ஆகாரின் நிமித்தமாகவும் மகன் இஸ்மவேலின் நிமித்தமாகவும் அவர் பெற்ற மனஉளைச்சல் ஏராளம். இன்னும் இஸ்ரவேலர் அதன் பலனை அனுபவித்து கொண்டு இருக்கின்றனர்.

பிரியமானவர்களே, நமது அன்றாட வாழ்விலும் அநேக காரியங்களில் 'தேவனே நீர் இப்படி செய்யும் இந்த படிப்பை படித்தால் தான் என் பிள்ளையின் எதிர்காலம் நன்றாக இருக்கும். எனக்கு வாழ்க்கை துணையாக வரும் பெண் இந்த குறிப்பிட்ட படிப்பை படித்திருந்தால் என் வாழ்க்கை நன்றாக இருக்கும் என்று பலவிதமான ஆலோசனை களை தேவனுக்கு கொடுத்து கொண்டேயி ருக்கிறோம். நாம் விரும்புவது தவறல்ல. ஆனால் அதைவிட மேலான காரியத்தை தேவன் திட்டமும் தெளிவுமாக நமக்காக முன் குறித்து வைத்துள்ளார். ஆகவே சகலத்தையும் நேர்த்தியாய் ஆளுகை செய்யும் தேவனை நம்பி அவர் சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்போம். அவர் நம்மை சரியான வழியில் நடத்துவார். ஆமென் அல்லேலூயா!



8ம் பக்கத் தொடர்ச்சி....

# விலையேறப்பெற்றவர்கள்

போலவும் ஆகும். அப்படி கழுவப்பட்ட நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்கள்!

அப்பொழுது கர்த்தர் நம்மை பார்த்து சொல்வார், 'நீ என் பார்வைக்கு அருமையான படியினால் கனம் பெற்றாய் நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர் களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்' என்று. அந்த 500 ரூபாய் நோட்டு எத்தனை அழுக்காயிருந்தாலும், அதன் மதிப்பு எப்படி குறையாதோ, அதைப் போல நாம் எப்பேர்ப்பட்ட பாவிகளாயிருந்தாலும், நம்முடைய ஆத்துமா விலையேறப்பெற்ற தாயிருக்கிறபடியால், அதற்காக தம்முடைய சொந்த இரத்தத்தையே சிந்தி நம்மை விலை கிரயம் கொடுத்து,

சத்துருவின் அந்த காரப்பிடியில் இருந்த நம்மை விடுதலையாக்கி அவருடைய இராஜ்ஜியத்தில் நம்மை சேர்த்த நமது இராஜாதி இராஜாவாகிய இயேசுகிறிஸ்துவுக்கே எல்லா மகிமையும் கனமும் உண்டாவதாக!

நீ என் பார்வைக்கு அருமையான படியினால் கனம் பெற்றாய் நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன். - (ஏசாயா 43:4).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன் தொழில்களிலும் உன்னைப்படைத்தவரை நினைந்துகொள்.

அருளம்பலம் ஸ்ரிபன் - இலங்கை இறையியற் கல்லூரி

வாலிபனே உன் வாலிபவயதில் உன்னைப் படைத்தவரை நினைந்து கொள் (பிரசங்கி 12:1) நாம் வாழ்கின்ற எமது இலங்கைச் சூழலில் வாலிபர்கள் பெருமளவிற்கு தொழில் செய்யும் வர்க்கத்தை சார்ந்தவர்களாக காணப் படுகின்றனர். இதன் காரணமாக அவர்கள் அதிக வேலைப் பழுவை சுமந்தவர்களா கவும் பரபரப்பான வாழ்வை உடையவர்க ளாகவும் வாழ்ந்து வருகின்றனர் இத்தகைய சூழ்நிலையில் வாலிபர்கள் எவ்வாறு தேவனை நினைந்து கொள்ளலாம்.

வேதாகமத்தை நாம் படித்து பார்க்கும்போது வேதாகமம் தேவனை ஓர் தொழிலாளியாகவே காண்பிக்கின்றது. குறிப்பாக படைப்பாளராக ஆதியாகமம் 1:2-27 மீட்பாளராக ஆமோஸ் 9:7 போன்ற பகுதிகளினுடாக தேவனை ஓர் தொழில் செய்பவராக வேதாகமம் சுட்டிக் காண்பிக்கின்றது. மேலும் ஆண்டவர் இயேசுவும் இப்பணிகளை தொடர்ந்தாற்று வதை நாம் காணலாம் யோவான் 5:36. இதனால் வாலிபர்களாகிய நாம் வேலைகளை செய்யும்போது தேவனும் எம்மை போன்ற ஓர் தொழிலாளி என்பதை நினைந்து கொள்வதினுடாக எம்மைப் படைத்தவரை நினைந்து கொள்ளலாம்.


தொழில் புரியும் போது எமது தொழிலுக்குச்சரியான ஊதியத்தை பெறவும் கொடுக்கவும் அழைக்கப் பட்டுள்ளோம். இதனையே தொழில் நீதி என அழைக்கின் றோம் மத்தேயு 20 ம் அதிகாரத்தில் பணியாளராகிய இயேசு நீதியின் முக்கியத்துவத்தை வலியுறுத் துகின் றார் குறிப் பாக தொழிலாளிகள் எல்லோருக்கும் ஒரே சமமான ஊதியத்தை வழங்குகின்றார் நாமும் எமது பணிகளில் தொழில் நீதியை கடைப்பிடிக்கும் போது நேரடியாவோ மறைமுகமாகவோ பணியாளனாகிய தேவனை நினைந்து கொள்கின்றோம்.

பணியில் சேவை இலக்கை அடித்தளமாக கொண்டே ஆண்டவர் இயேசு பணிபுரிந்துள்ளார். எனவே போட்டியற்ற பணி, பிரபல்யத்தை எதிர்பார்க்காத பணி, தியாகப்பணி, தன்னைத்தான் இழக்கும் பணி போன்ற அணிகலன்களை வாலிபர்களாகிய நாம் அணிந்து பணியாற்றும் போது எம்முடன் இணைந்த பணியாற்றும் ஏனையவர்கள் தேவனை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது இதனை மாற்கு 10: 45 நாம் படிக்கலாம்.

தொழில் செய்யும் வாலிபனே, உன் தொழில்களிலும் உன்னைப் படைத்தவரை நினைந்துகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறுக்கெழுத்துப் போட்டி இல.: 98

உருவாக்கம் : N.கோபிகா

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | 2 | | 3 |
| 4 | | | | | | | |
| | | | | | | | |
| | | | 5 | | | | 6 |
| | | | | | | | |
| | | | 7 | | | | |
| 8 | 9 | | | | | | 10 |
| | | | | | 11 | | |

## மேலிந்து கீழ்

1. ......... நீங்கள் கண்ட எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள் (முதல் இரு எழுத்து இல்லை).

2. தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு இத் தீர்க்கதரிசியினால் அவன் பாவம் உணர்த்தப்பட்டது.

3. சீஷர்களை விட்டு ............ எறிதூரம் அப்புறம் போய், இயேசு முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணினார். (இடைவெளியில் வரவேண்டும்).

4. இது செம்மையானவர்களுக்குத் தகும்.

5. அவர் .......... இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரை துதிப்பேன்.

6. தேவன் எகிப்தியருக்குக் கொடுத்த வாதைகளில் ஒன்று (இறுதி இரு எழுத்து இல்லை).

9. என் நாவு உமது நீதியையும் நாள் முழுதும் இதனையும் சொல்லிக்கொண்டிருக்கும்.

10. எகிப்துக்குப் போன இஸ்ரவேலுடைய குமாரரின் நாமங்களில் ஒன்று.

## இடமிருந்து வலம்


4. இதோ, நான் ................ உருவானேன்.

5. கபடு செய்யும் உன் நாவு தீட்டப்பட்ட இக் கத்தியைப் போல் இருக்கிறது. (குழம்பியுள்ளது).

7. கர்த்தருடைய இது தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.

8. அவர் ..................... எப்போதும் என் வாயிலிருக்கும் (இடைவெளியில் வரவேண்டியது)

11. போவாஸ் இவனைப் பெற்றான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 96றகான விடைகள்

### இடமிருந்து வலம்

4. அகினோவாம்
5. காத்
8. ஜீன்வ (ஜீவன்)
9. எபசனேர் (எபனேசர்)
10. மான்
11. மாராள்

### மேலிருந்து கீழ்

1. யோனத்தான்
2. மகிமை
3. நோவா
6. ல்வுச (சவுல்)
7. தூதர்கள்
9. எலியா (எலியாப்)
10. மாசா

### குறுக்கெழுத்துப் போட்டி 96 றகான வெற்றியாளர்

இல்லை

**இப் போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான இவ்இதழைத் தொடர்ந்து பெறுவார்**

### குறுக்கெழுத்துப் போட்டி 98றகான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15.06.2016

**அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப் போட்டி இல. 98,
"வாலிபன்"
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.



## சிறுவர்களுக்கான வினாவிடை போட்டி இல.: 91

1. மோசேயுடைய ஊழியக்காரன் எனசொல்லப்பட்டவன் யார்?
2. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், ..............அவர்களுடையது.
3. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ........................ எனப்படுவார்கள்.
4. மோசேயால் திருப்பி அனுப்பப்பட்ட மனைவியின் பெயர் என்ன?
5. உடன்படிக்கைப் பெட்டி எந்த மரத்தினால் செய்யப்பட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா விடைப் போட்டி
### 89ற்கான விடைகள்

1. அக்கினி ஜுவாலை.
2. உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமுள்ள வெண்கலம்
3. ஏழு நட்சத்திரங்கள்
4. இருபுறமும் கருக்குள்ளபட்டயம்
5. வல்லமையாய்ப் பிரகாசிக்கின்ற சூரியனைப் போல

### 89இற்கான வெற்றியாளர்

சரியான விடைகள் கிடைக்கப்பெறவில்லை.

இப் போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றை பரிசாகப் பெறுவர்

வினா விடைப்போட்டி 91ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி

**15.06.2016**

### அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்
வினா விடைப் போட்டி
இல.91,
"வாலிபன்"
கோட்டைமுனை
மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.

### போட்டி பற்றிய நிபந்தனைகள்

16 வயதிற்குட்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும்.
ஞாயிறு பாடசாலை அதிபர்/ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

# புத்து மடங்கு ஞானம்

7ம் பக்கத் தொடர்ச்சி....

'ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று' (கலாத்தியர் 3:14). கிறிஸ்து இயேசுவின் மூலமாக நமக்கு அந்த ஆசீர்வாதம் கிடைக்கும் படியாக தேவன் கிருபை செய்தார். அவர் வாக்குபண்ணிவிட்டார். அதை கேட்டு பெற்றுகொள்ளவேண்டியது நமது கடமை! நம்முடைய பிள்ளைகளில் யாராவது ஞானத்தில் குறைவுள்ளவர்களாயிருந்தால், அவரிடம் கேட்போம், 'ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிற வர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா' (மத்தேயு 7:11) என்று நமக்கு எப்போதும் நன்மையானவைகளையே கொடுக்கும் நம் பரமபிதா நிச்சயமாகவே நாம் விரும்பும் ஞானத்தை நமக்கு கொடுப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனந்திரும்புதல்

## மிகவும் கடினமான, ஆனால் மிகவும் எளிய காரியம்!

ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவது மிகவும் கடினமான காரியம், ஆனால் அதுவே எளிதான காரியமும்கூட என்றுதான் நான் சொல்லுவேன். இது ஒரு முரண்பாடான காரியம்போலத் தோன்றலாம். ஆனால் மறுபடியுமாகச் சொல்லுகிறேன், ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவது மிகவும் கடினமான காரியம் ஆனால் அதுவே எளிதான காரியமும்கூட!

இந்தப் பட்டணத்தில் எனக்கு ஒரு சொந்தக்காரப் பையன் இருக்கிறான். அவனுக்கு மூன்று அல்லது நான்கு வயதுதான் இருக்கும்! ஒருமுறை அவன் வேதாகமத்தை எடுத்துக் கீழே எறிந்துவிட்டான். அதை நான் ஒரு பொக்கிஷமாகக் கருதிவந்தபடியால் இது எனக்குப் பிடிக்கவில்லை.

"போ, அந்த வேதாகமத்தை எடுத்துக்கொண்டு கொடு." என்று அவனுடைய அம்மா கட்டளையிட்டாள்.

"முடியாது..." என்று அவன் பதிலளித்தான்.

"இப்போதே போய் அந்த வேதாகமத்தை எடுத்துக்கொடு..." என்று அவனுடைய தாய் மறுபடியுமாகக் கட்டளையிட்டாள்.

"என்னால் முடியாது" என்று அந்தச் சிறுவன் பதிலளித்தான்.

தான் சொன்னது அவனுக்குப் புரியவில்லையோ என்று அந்தத் தாய் நினைத்தாள். ஆனால் அவனுக்கு எல்லாம் புரிந்திருக்கிறது கீழ்படிவதற்கு அவனுக்கு விருப்பமில்லை என்பதே காரணம்!

கிறிஸ்துவிடம் வருவதைப் பொருத்தவரையில் மக்கள் இப்படித்தான் நடந்துகொள்ளுகிறார்கள். அவர்கள் முதலில் முடியாது என்று மறுக்கிறார்கள். பிறகு அது தங்களுக்கு இயலாத காரியம் என்று சொல்லுகிறார்கள். இறுதியில் தங்களுக்கு அதில் விருப்பமில்லை என்பதை வெளிப்படுத்துகிறார்கள்.

அவனுடைய அப்பா நிர்ப்பந்தித்தவுடன் அந்தப் பையன் கீழே கிடந்த வேதாகமத்தின் அருகே சென்றான். அதைத் தன்னால் தூக்கமுடியவில்லை, அது பாரமாக இருக்கிறது என்பதுபோலப் பாவனை செய்தான். உண்மையில் அவன் ஒரு ஆரோக்கியமான பையன்! அவனால் அதை மிக எளிதாகத் தூக்கியிருக்க முடியும்!

இப்போது அந்த இளம்தாய் என்ன செய்யப்போகிறாள் என்பதை நான் உன்னிப்பாகக் கவனித்ததேன். ஏனென்றால் இந்தச் சிறுவயதில் அவள் அவனுடைய சித்தத்தை நொறுக்காவிட்டால், பின்னாட்களில் அவன் அவளுடைய இருதயத்தை நொறுக்கிவிடுவான்.

அவள் ஒரு கம்பைக் கையில் எடுத்துக்கொண்டாள். இப்போது அந்தப் பையன் அந்த வேதாகமத்தை மிக எளிதாகத் தூங்கிவிட்டான்! அவன் தன்னுடைய மனதில் முடிவுசெய்த பிறகு அது எளிதாக இருந்தது.

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனதார மன்னிப்பு

போல் கிறிஸ்டி - கொழும்பு

நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார். - (மாற்கு 11:25-26).

ஒரு பெண்மணி புற்று நோயினால் மிக கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தாள். அவள் அதிகபட்சம் ஆறு மாதங்களே உயிரோடிருப்பாள் என மருத்துவர்கள் கூறி விட்டனர். ஒரு நாள் மருத்துவர்கள் சொன்ன முடிவை தனது 12, 14 வயது மகன்களிடம தெரிவித்தாள். உடனே மூத்தவன் ஒரு வேதாகமத்தை கொண்டு வந்து தாயின் அருகில் அமர்ந்து மாற்கு 11:24-ஐ வாசித்தான். 'ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்' என்ற வசனத்தை கேட்டவுடன் தாய் ஆச்சரியப்பட்டாள். அவள் ஒரு கிறிஸ்தவளாயிருந்தாலும் இந்த வசனம் வேதத்தில் இருப்பதை அறிந்திருக்கவில்லை. அன்றிரவு படுக்கைக்கு செல்லுமுன் மகன் வாசித்த தேவ வசனத்தை எடுத்து வாசித்தாள். அதை தொடர்ந்துள்ள வேத வசனங்களையும் வாசிக்க தூண்டப்பட்டாள். 'நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி அந்த குறையை அவனுக்கு மன்னியுங்கள்'. - (வசனம் 25). இவ்வசனம் அவளுடைய உறவினர்கள் பேரில் அவளுக்கிருந்த மன்னிக்க முடியாத ஆவியை அவளுக்கு உணர்த்திற்று.

தன் உறவினர்கள் அனைவரையும் மன்னிக்க தனக்கு உதவி செய்யும்படி கர்த்தரிடம் மனங்கசந்து அழுது மன்றாடினாள். என்ன ஆச்சரியம்! அநேக மாதங்களாக நித்திரையின்றி கஷ்டப்பட்ட தாய், ஒரு குழந்தை தன் தாயின் கரங்களில் உறங்குவதுபோல, அன்றிரவு நன்றாக உறங்கினாள். மறுநாள் காலையில் தான் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதை உணர்ந்து மருத்துவரை காண சென்றாள். புற்று நோய் முற்றிலும் குணமாகிப் போயிருந்ததை கண்டு மருத்துவர்கள் பிரமிப்படைந்தனர். இப்போது நல்ல சுகத்துடன் புற்று நோயாளிகள் மத்தியில் ஊழியக்காரியாக தொண்டு செய்து வருகிறாள்.

மன்னிப்பு என்பதற்கான கிரேக்க பதத்திற்கு விடுதலையாக்குதல் என்ற ஒரு அர்த்தமும் உண்டு. நமக்கு விரோதமாக தவறிழைத்தவர்களை மன்னிப்பதின் மூலமாக நாம் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலையாக்கு வதோடு மட்டுமல்லாமல், நம்மையும் விடுவித்து கொள்கிறோம். மற்றவர்களை முழு இருதயத்தோடும் மன்னிக்க முடியாதவர்களால் மெய்யான விடுதலையை ஒருபோதும் அனுபவிக்க முடியாது. பிறரை மன்னிக்க முடியாத ஆவி, கோபம், பழி வாங்குதல், கசப்பு, சீற்றம் முதலான குணங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் நோய் நிறைந்தவர்களாகவே காணப்படுவார்கள். உடனுக்குடன் மன்னித்து தங்களுடைய இருதயத்திலிருந்து அன்புகூரக்கூடிய ஒரு கூட்ட ஜனங்களே தேவனுக்கு தேவையாயிருக்கிறார்கள்.

மன்னித்தல் நொறுங்கிய இருதயங்களை குணமாக்கும், முறிந்து போன விவாகங்களை இணைத்து விடும். சிதைந்து போன வாழ்க்கையை சீர்படுத்தி விடும். தகர்ந்து போன குடும்பங்களை ஒன்றாக்கிவிடும். மன்னிக்கும் ஜனங்களுக்கு மாத்திரமே ஒளிமயமான எதிர்காலம் உண்டு. இவர்கள் மட்டுமே, சிறந்ததொரு வருங்காலத்தை மற்றவர்களுக்கு வழங்கக்கூடும்.

பிறரை மன்னிக்க முடியாதவர்கள் மரிக்கும்போது கூட பற்களை கடிக்கின்றனர் என கூறுவார்கள். ஆனால் நம்முடைய அருமை ஆண்டவர் இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கி கொண்டிருக்கும்போது, உரைத்த ஏழு வார்த்தைகளில் முதலாவதும், கடைசியும் 'பிதாவே' என ஆரம்பிக்கின்றன. **1.பிதாவே இவர்களுக்கு மன்னியும். 2.பிதாவே உம்முடைய கைகளில் என்** ஆவியை ஒப்புவிக்கிறேன். பிறரை மன்னித்தவர்களால் மாத்திரமே தங்கள் ஆவியை பிதாவின் கரங்களில் சமாதானத்துடன் ஒப்புக்கொடுக்க முடியும். பிறரை மன்னிக்க முடியாதவர்கள் வாழும்போது இருந்த கசப்புடனே புறம்பான இருளுக்குள்ளும் செல்லுவர். மற்றவர்களை மன்னிப்போமா? சுகமுடன் வாழ்வோமா?

## மனந்திரும்புதல்

**15ம் பக்கத் தொடர்ச்சி....**

மனிதர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுவது மிக எளிதான காரியம்தான், ஆனால் அவர்கள் தங்கள் சுய சித்தத்தை விட்டுவிட மனதில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்பதே பிரச்சினையாகும்.

நீங்கள் இரட்சிக்கப்பட விரும்பினால் இப்போதே கிறிஸ்துவை உங்கள் இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளுங்கள். மனந்திரும்பி, "ஆண்டவரே, நீர் என்னை இரட்சிப்பீர் என்று நான் நம்பிக்கை வைத்திருப்பேன்." என்று ஜெபியுங்கள்.

அவர் தமது அன்பான கரங்களால் உங்களை அணைத்துக் கொண்டு, தமது நீதியின் வஸ்திரத்தை உங்களுக்கு அணிவிப்பார்.

**பிரசங்க வசனம் :**

நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு.

– வெளிப்படுத்தல் 3:19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லதொரு போராட்டம் வெற்றியின் அடையாளம்

P.பிறிசில்லா

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நல் நாமத்தினாலே உங்கள் ஒவ்வொருவரையும் அன்போடு வாழ்த்துகின்றேன். வாலிபனின் 100வது இதழ் வெளிவரக் கிருபை செய்த கர்த்தருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

ஆதியாகமம் 1:27 "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" என்ற வார்த்தையின் படி நாம் தேவசாயலாக அவருடைய சொந்த ஜனமாக இவ்வுலகில் அவதரித்துள்ளோம்.

சிந்தனைக்கு ஒரு நொடி உலகப் பிரகாரமாக குடும்பத்தில், பாடசாலையில், அலுவலகத்தில் எமக்குக் கொடுக்கப்படுகின்ற பொறுப்புகளினை (கடமைகளினை) உரியவேளையில் நிறைவு செய்ய நாழ் எடுக்கும் முயற்சி, செலவிடும் நேரத்தினையும் கர்த்தருடைய பிள்ளைகளாய், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாய் கர்த்தரால் எமக்கென கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பினை நிறைவு செய்ய செலவிடும் நேரத்தினையும், எடுக்கும் முயற்சியினையும் ஒப்பிட்டுப் பார்க்க அழைக்கப்படுகின்றோம்.

"சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது" (ரோமர் 11:36) "WE are for Jesus" இவ் வார்த்தைக்கு ஊடாக கர்த்தர் நம்மிடம் தெளிவுபடுத்த முயல்கின்ற விடயம் யாதெனில் நீங்களும் நானும் அவராலே உருவாக்கப்பட்டு அவருக்காக வாழவும் அவராலே தெரிந்து கொள்ளப்பட்டுள்ளோம். எம் தேவன் எவ்வளவு அருமையானவர் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள், பாவிகளாகிய எம்மை அவருக்கென ஏற்படுத்தும் சிலுவை மரணத்தினால் எம்மை நீதிமான்களாக்கியுள்ளார்.

கர்த்தருடைய நோக்கம் என்ன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்வது அவசியம். ii கொரிந்தியர் 9:10ம்வசனத்தின் படி குறிப்பிடப் படுகின்ற விதையானது கர்த்தர் எமக்குக் கொடுத்துள்ள பொறுப்புகளெனக் கருதினால், அப் பொறுப்புகளை செவ்வனே நிறைவுசெய்து வெற்றியைக் காண்பதற்குத் தேவையான தாலந்துகளையும். கிருபையையும் வழிகாட்டல்களையும் தமது வார்த்தையின் படி அருளியுள்ளார்.

உதாரணமாக: கர்த்தருடைய தாசனாகிய மோசேயை எடுத்துக்கொண்டால் கர்த்தருடைய வார்த்தைக்கு இணங்க இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து மீட்டுவர முயன்றபோது பல தடைகளையும் போராட்டங்களையும் எதிர்கொண்டார் ஆயினும் அவை அனைத்தையும் முறியடிக்கத்தக்க வல்லமையையும் வழிகாட்டலையும் கர்த்தர் கொடுத்தமையினையும் யாத்திராகமத்தில் வாசிக்கின்றோம்.

ஆகவே எனக்கு அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே! கர்த்தருடைய திட்டத்தை இவ்வுலகில் அவருடைய பிள்ளையாய் நிறைவேற்றவேண்டியது எமதுபொறுப்பாகும். எனவே எனது பொறுப்பை நான் நல்ல விதமாக, உரியநேரத்தில், கர்த்தருக்கென்று நிறைவேற்ற எம்மை நாமே ஆயத்தப் படுத்துவோமாக.

**"எழும்பிப் பிரகாசி உன் ஒளிவந்தது"**

கர்த்தர் தாமேஉங்களை ஆசிர்வதித்து வழி நடத்துவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெட்கப்பட்டு போவதில்லை

ஒரு ஊரில் ஜூலி என்ற ஒரு சிறுமி தனது தாயுடனும், தம்பியுடனும் ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து வந்தாள். அவளுக்கோ தந்தை இல்லை. எனினும் இயேசப்பாவை தனது தந்தையாக எண்ணி வாழ்ந்தாள். என்ன கஷ்டமோ, சந்தோஷமோ உடனடியாக இயேசப்பாவிடம் ஜெபித்து கூறுவாள்.

ஒரு நாள் பாடசாலையில் பேச்சுப் போட்டிக்காக மாணவர்களை விண்ணப்பிக்க கூறி அதிபர் அறிவித்தார். ஜூலிக்கு அந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்கு விருப்பமாக இருந்தது. ஆனால் அவளுக்கு சிறு பயம் காணப்பட்டது. ஏனெனில் அவள் கதைக்கும் போது அவள் திக்குவாள். என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டிற்குச் சென்று நன்றாக ஜெபித்துவிட்டு அடுத்த நாள் காலை பாடசாலை சென்று அந்தப் போட்டிக்கு பங்கு பற்றுவதற்காக தனது பெயரைப் கொடுத்தாள்.

போட்டித் தினத்தன்று சகல மாணவர்களும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். ஜூலி பங்கேற்கப் போவதைக்கண்ட அவளது வகுப்பு மாணவர்கள் "உனக்கு திக்காமல் கதைக்கவே தெரியாது நீ பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு வெல்லப் போகிறாயா? என்று கேலி செய்தனர். ஜூலி எதுவும் பேசாமல் மனதில் ஜெபித்தவாறு கலந்து கொண்டாள்.

ஜூலியின் முறை வந்தது! ஜூலி பேசத் தொடங்கினாள். நடுவர்களாக இருந்த ஆசிரியர்கள் ஜூலி பேசுவதைக் கேட்டு வியந்தார்கள். ஒரு தடுமாற்றமும் இன்றி ஒரு சொல் கூட திக்காமல் பேசினாள். போட்டி முடிவுற்றதும் முடிவுகள் அறிவிக்கப்பட்டது. ஜூலிக்கு 2ம் இடம் கிடைத்தது. அவளை கேலி செய்த அனைவரும் வாயடைத்துப் போனார்கள்.

என் அன்பு தம்பி, தங்கைகளே யோவேல் 2:27இல் "என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டு போவதில்லை" என்று எழுதியுள்ளது. இன்று எம்மில் பலர் நாம் கிறிஸ்தவர்கள் என்று சொல்வதற்கே வெட்கப்படுகின்றோம். ஆனால் கர்த்தர் தம் பிள்ளைகளை வெட்கப்பட்டுப்போக விடுவதில்லை. நாம் எப்போதும் அவரை நம்பி வாழும் போது எச்சந்தர்ப்பத்திலும் நாம் வெட்கப்பட்டு போவதில்லை. எமக்கும் பல இயலாமைகள் உள்ளது. ஆனால் நாம் இயேசப்பாவுடன் நடக்கும் போது ஒருக்காலும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

**ஜெபம் : அன்புள்ள இயேசப்பா, நான் உம்மை நம்பி உம்முடன் சேர்ந்து நடக்க உதவி செய்யுங்கள். ஆமென்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்

"அண்ட சராசரங்களைப் படைத்த இறைவனைப் பார்க்கும் அருள் பெற்ற ஆன்மாவுக்கு மற்றெல்லா படைப்புக்களும் ஒரு துரும்பே"

- புனித பெனடிக்ட் -

480 - 543



உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்கு தபால் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ குறுஞ்செய்தி மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். நாங்களும் உங்களுடன் சேர்ந்து உங்களுக்காக ஜெபிப்போம்.

**SMS ற்கான இலக்கங்கள்:**

077-7813269 077-2335106
077-9584930 077-7718847

இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மை தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரப்புவதாக.

வாலிபர்களுக்கான விஷேட ஜெபம் ஒவ்வொரு சனிக் கிழமைகளிலும் காலை 7.00 மணிக்கு கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறும்.

கடிதத் தொடர்புகளுக்கு:

ஆசிரியர்,
" வாலிபன் " சஞ்சிகை,
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு, இலங்கை.

vaalipankyf@gmail.com

http://www.vaalipan.com/

/VAALIPAN/ /Vaalipan_kyf

வாலிபன்
VAALIPAN
வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

VAALIPAN MINISTRIES
SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணசிங்கா பிறிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு. 065 222 7170